DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | துரை |
| Father's Name | பிச்சமுத்து |
| Village | கச்சேரி ரோடு |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | லாரி சுமை தூக்கும் தொழிலாளர் தொழிற்சங்க செயலாளர் |
| Age | 77 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **15.10.2025**

**I.A. 05/2024 in O.S. No. 05/2024 எ.ம.சா.1**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. நான் 5–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். 1–ம் எதிர்மனுதாரர் சங்கமானது பதிவு செய்யப்பட்ட சங்கமா என்றால் ஆமாம். மேற்படி சங்கமானது எந்த சட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தொழில் தகராறு சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டது. எந்த மாதம் வருடம் பதிவு செய்யப்பட்டது என்றால் நினைவில்லை ஆனால் பதிவு எண்.1522/VLR. எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்றால் நினைவில்லை பார்த்து தான் சொல்லமுடியும்.

2. மேற்படி சங்கத்தின் அலுவலக விலாசம் என்னவென்றால் 1185/A கச்சேரி ரோடு வாணியம்பாடி ஆகும். மேற்படி விலாசம் தான் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் என்றால் சரிதான். பொதுவாக மேற்படி சங்கத்தில் கூலிக்கு வேலை செய்பவர்கள் தான் பதிவு செய்யப்படுவார்கள் என்றால் சரிதான் அவர்கள் தான் உறுப்பினர்களாக இருப்பார்கள். உறுப்பினர்கள் அனைவருக்கும் சங்கம் தான் பொறுப்பு என்று சொன்னால் சரிதான்.

3. மேற்படி சங்கத்தில் எத்தனை பொறுப்பு பதவிகள் உள்ளன என்று சொன்னால் 5 பதிவுகள் முறையாக தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைசெயலாளர், பொருளாளர். நான் எந்த வருடத்தில் இருந்து செயலாளராக இருந்து வருகிறேன் என்று சொன்னால் 1995–ம் வருடம் முதல். மேற்படி சங்கத்தில் தேர்தல் நடத்தப்படுமா என்றால் வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும். கடைசியாக எப்போது

தேர்தல் நடைபெற்றது என்றால் 2025-ம் வருடம். இந்த வருடமும் நான் தேர்ந்தெடுக்கப்பட்டு தான் செயலாளராக இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான்.

4. மேற்படி சங்கத்தின் தலைவர் யார் என்றால் வி.ரத்தினம் என்பவர் தான், அவரும் சிறிது நாட்களுக்கு முன்பு இறந்துவிட்டார். பொதுவாக சங்கத்தின் உத்தரவுபடி தான் சங்கத்தின் உறுப்பினர்கள் செயல்படுவார்கள் என்றால் சரிதான். மேற்படி சங்கத்தில் எத்தனை உறுப்பினர்கள் இருப்பார்கள் என்றால் சுமார் 100 பேர் இருப்பார்கள். உறுப்பினர்கள் சந்தா தொகை செலுத்துவார்களா என்றால் செலுத்துவார்கள்.

5. மேற்படி சந்தா தொகையானது வருடத்திற்கு ஒரு முறையா அல்லது மாத சந்தாவா என்றால் மாதத்திற்கு ஒரு முறை சந்தா கட்டுவார்கள். மேற்படி சந்தா தொகை வாங்குவதற்கு தனியாக ரிஜிஸ்டர் ஏதேனும் பராமரிக்கப்படுகிறதா என்றால் பராமரிக்கப்படுகிறது. மேற்படி சந்தா ரெஜிஸ்டரே தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வீர்களா என்றால் தாக்கல் செய்வேன்.

6. சந்தா கட்டிய உறுப்பினர்கள் என்ன செய்தாலும் சங்கம் தான் பொறுப்பு என்று சொன்னால் சரிதான். சங்கத்தின் 100 உறுப்பினர்களும் வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மட்டும்தான் என்று சொன்னால் சரிதான். வட இந்தியர்கள் எவரும் சங்கத்தின் உறுப்பினராக இல்லை என்று சொன்னால் சரிதான்.

7. சங்கத்தின் தேசிய என்ற வார்த்தை இடம் பெற்றிருக்கின்ற போதிலும் வட இந்தியர்கள் சங்கத்தில் உறுப்பினராக இருக்க நாங்கள் அனுமதிக்கவில்லை என்று சொன்னால் சரிதான் இந்தி பேசுபவர்களை சேர்ப்பதில்லை. மேற்படி சங்கத்தின் உறுப்பினர்கள் எத்தனை வருடமாக மனுதாரர்/வாதியிடம் தினக்கூலியாக வேலை செய்து வருகிறார்கள் என்றால் சுமார் 10 வருடங்களாக. தினக்கூலிக்கு இவ்வளவு தொகை தான் கொடுக்க வேண்டும் என்று எங்கள் சங்கம் தான் நிர்ணயிக்கிறது என்று சொன்னால் சரிதான்.

8. மேற்படி கூலி தொகை எதன் அடிப்படையில் நாங்கள் நிர்ணயிக்கிறோம் என்று சொன்னால் எடை மற்றும் பொருளுக்கு தகுந்தவாறு நிர்ணயிக்கப்படுகிறது. டன் கணக்கில் தான் கூலி தொகை நிர்ணயிக்கப்படும் என்று சொன்னால் டன் கணக்கிலும் மற்றும் உருப்படி கணக்கிலும் நிர்ணயிக்கப்படும். பொதுவாக நாங்கள் நிர்ணயிக்கும் கூலித்தகையை உயர்த்துவதும் உண்டு என்று சொன்னால் சரிதான் விலைவாசிக்கு தகுந்தவாறு உயர்த்தப்படும்.

9. இவ்வளவு தொகை தான் கொடுக்க வேண்டும் என்று எங்கள் சங்கத்திற்கு ஏதேனும் சட்டம் உள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. எங்கள் சங்கத்தின்

உறுப்பினர்கள் வாதி நிறுவனத்தை தவிர இதர நிறுவனங்களுக்கும் வேலைக்கு செல்லுவோர் உண்டு என்று சொன்னால் சரிதான்.

10. எங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் இதர நிறுவனங்களிலும் வேலைக்கு செல்வதால் மனுதாரர் நிறுவனத்தின் வேலை செய்யாததால் எதுவும் பாதிப்புக்கு உள்ளாகவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் டேனர்ஸ் அசோசியேசன் உடன் ஒப்பந்தம் போட்டோம் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் எங்கள் சங்கத்தின் ஆட்கள் தான் டேனர்ஸ் அசோசியேஷன்க்கு வேலைக்கு செல்ல வேண்டும் என்று சரத்து இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான். அதேபோல மனுதாரர் நிறுவனத்திடமும் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல அவர்கள் ஒப்பந்தத்திற்கு வரவில்லை. மனுதாரர் நிறுவனத்திற்கு வரும் லாரிகளில் டன் கணக்கில் பொருட்கள் வரும் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு வரும் பொருட்களை ஏற்ற இறக்க எங்கள் சங்கத்து ஆட்களை பயன்படுத்திக் கொள்வார்கள் என்று சொன்னால் சரிதான்.

12. எங்கள் சங்கத்தில் கூலி தொகை நிர்ணயிப்பது அனைத்து நிறுவனம் மற்றும் ஃபேக்டரிகளுக்கு தெரியப்படுத்துவோமா என்று சொன்னால் சரிதான் அறிவிப்பு மூலம் தெரியப்படுத்துவோம். தற்போது என்னிடம் காட்டப்படும் 11.03.2024-ம் தேதியிட்ட மனுதாரர் நிறுவனத்திற்கு எங்கள் சங்கத்தின் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு தானா என்றால் சரிதான். **(மேற்படி 11.03.2024-ம் தேதியிட்ட வி.எம்.ஏ.ஆர் லாரி சர்வீஸ் க்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

13. கூலித்தொகை உயர்வு குறித்து மனுதாரர் நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டதா என்று சொன்னால் அனுப்பப்பட்டது, அவர் அந்த சமயத்தில் பங்குதாரராக இருந்தார். கடைசியாக கூலி தொகை எப்போது உயர்த்தப்பட்டது என்று சொன்னால் 14.03.2024-ம் தேதி. மேற்படி உயர்த்தப்பட்ட பிறகு மனுதாரர் நிறுவனத்திற்கு உயர்த்தியதற்கு தெரிவிப்பதற்காக நோட்டீஸ் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை வாய்மொழியாக தெரிவித்தோம். வாய்மொழியாக கூறிய தேதி நினைவு உள்ளதா என்றால் 14.03.2024 அன்றைய தினமே தெரிவிக்கப்பட்டது.

14. கூலித்தொகை உயர்வை யாரேனும் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் என்ன செய்வோம் என்று சொன்னால் நாங்கள் தொழிலாளர் நீதிமன்றம் செல்வோம். சங்கத்தின் சார்பாக ஒப்புக் கொள்ளாத நபர் மீது தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வோம். சங்கம் சார்பாக மனுதாரர் நிறுவனத்தின் மீது அவ்வாறு வழக்கு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

15. நாங்கள் நிர்ணயிக்கும் கூலி தொகை உயர்வை ஒப்புக்கொள்ளாத நிறுவனத்தின் மீது சட்டவிரோதமாக நடந்து கொள்வோம் என்று சொன்னால் சரியல்ல. டிரான்ஸ்போர்ட் நிறுவனம் அவ்வாறு ஒத்துக்கொள்ளவில்லை என்றால் அவர்களின்

லாரியை நாங்கள் சிறை பிடிப்போம் என்று சொன்னால் சரியல்ல. அது மட்டும் இல்லாமல் அவர்களின் தொழிலுக்கு தடங்கலும் ஏற்படுத்துவோம் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் நிறுவனத்திற்கு சொந்தமான லாரியில் வரும் பொருட்கள் எல்லாம் எங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் அந்த நிறுவனத்தில் நேரடியாக ஏற்றுதல் இறக்குதல் செய்வார்கள் என்றால் சரிதான். அவ்வாறு எடை உயர்ந்த பொருட்கள் வரும்போது எங்கு இறக்க வேண்டுமோ அங்கு நேரடியாக லாரி வந்துவிடும் என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் சங்கத்தின் வேலையாட்களும் அங்கு நேரடியாக வந்து விடுவார்கள் என்றால் சரிதான்.

16. மனுதாரர் தரப்பில் அவர்களுடைய லாரி எங்கே எல்லாம் ஏற்றுதல் இறக்குதல் செய்வதற்கு செல்கிறதோ அந்த இடம் எல்லாம் அவர்கள் தொழில் செய்யும் இடம் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் நிறுவனத்தின் குடோன் மட்டும் அவர்கள் தொழில் செய்யும் இடம் என்று கிடையாது லாரி எங்கெல்லாம் சென்று வருகிறதோ அந்த இடமும் தொழில் செய்யும் இடம் தான் என்று சொன்னால் சரியல்ல.

17. என்னுடைய முதல் விசாரணை வாக்கு மூலத்தில் எங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் பாரா 30–ல் 9 நபர்கள் மனுதாரரரின் நிறுவனத்திற்கு எதிராக தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆம். என்னுடைய முதல் விசாரணை வாக்கு மூலத்தில் மேற்படி 9 வழக்குகளும் நிலுவையில் இருக்கிறது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் கடந்த 12.07.2024–ம் தேதி மேற்படி 9 வழக்குகளும் முடிக்கப்பட்டது என்று அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான், அதற்கு மறுப்பு தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளது. **(மேற்படி 12.07.2024–ம் தேதியிட்ட வேலூர் தொழில் உதவி ஆணையர் ந.க.எண்.198/2024 முதல் 206/2024 அறிவிப்பு ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

18. மேற்படி தொழிலாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய 9 வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதை மறைத்து நிலுவையில் உள்ளது என்று தவறாக இந்த மனுவில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக ஸ்டீபன், முரளிவேலு, பாலு, சக்கரவர்த்தி மற்றும் குட்டி ஆகிய நபர்கள் இருக்கிறார்களா என்றால் சரிதான், வேலு என்ற இரண்டு உறுப்பினர்கள் இருக்கிறார்கள் அதில் எந்த நபர் என்று தெரியவில்லை என சாட்சி பதிலளிக்கிறார்.

19. என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 ஆன அறிவிப்பில் தேதி எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி அறிவிப்பின் இந்த வழக்கில் இ.ம.எண்.02/2024–ல் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதால் அந்த இ.ம.எண்.02/2024 உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் அச்சிடப்பட்டது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமான இ.ம.எண்.02/2024–ன் உத்தரவாணை முதல் பாராவில்

"எந்த இடத்திலும்" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **(மேற்படி இ.ம.எண்.02/2024 பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

20. நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவில் எந்த இடத்திலும் இடையூறு செய்யக்கூடாது என பிறப்பித்துள்ள உத்தரவு நாங்கள் மீறி விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ.ம.சா.ஆ.1 அறிவிப்பு அச்சிடப்பட்டு வெளியிட்டதே உத்தரவை மீறிய செயலாகும் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் இடைக்கால உத்தரவை மீறியதால் தான் மனுதாரர் எங்களுக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார்கள் மற்றும் மேல் அதிகாரிகளிடமும் புகார்கள் கொடுக்கும் சூழ்நிலை உருவாகியது என்று சொன்னால் சரியல்ல.

21. தற்போது என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு தான் மனுதாரர் நாங்கள் அனுப்பிய அறிவிப்பிற்கு அனுப்பிய பதில் அறிவிப்பு என்றால் சரிதான். **(மேற்படி 14.03.2024–ம் தேதியிட்ட அறிவிப்பானது ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

22. நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை மீறி சங்கமும் சங்கத்தின் உறுப்பினர்களும் செயல்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது**

**மறுவிசாரணை இல்லை.**

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI
Date: 2025.11.28 11:22:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.